செ.வெ.எண்: 747 நாள்: 13.11.2020

**சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்களை காப்பீடு செய்து கொள்ள விவசாயிகளுக்கு**

**தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அழைப்பு**

தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி நெற்பயிர் சாகுபடி செய்யும் பணி தீவரமாக நடைபெற்று வருகிறது. பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் ரபி சிறப்பு பருவம் 2020-21 ம் ஆண்டிற்கு செயல்படுத்திட இப்கோ டோக்கியோ பொது பயிர் காப்பீட்டு நிறுவனம் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 873 வருவாய் கிராமங்கள் பயிர் காப்பீடு செய்திட அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நெற்பயிருக்கு காப்பீட்டு தொகை ஏக்கருக்கு ரூ.32550/- விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத்தொகை ஏக்கருக்கு ரூ.489/-, பிரிமியம் செலுத்திட கடைசி நாள்: டிசம்பர் மாதம் 15ம் தேதி ஆகும்.

நெல் சம்பா மற்றும் தாளடி பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ள அடங்கல் வாங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், தங்களிடம் அடங்கல் பெறுவதற்கு அணுகும் விவசாயிகளுக்கு உடன் அடங்கல் வழங்கிடவும், அடங்கலில் மேல் பகுதியில் 1429 பசலி ஆண்டு (கடந்த ஆண்டு இதே பருவத்தில்) சாகுபடி செய்த விவரமும், கீழே நடப்பு பசலி 1430 ம் ஆண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் பரப்பு மற்றும் சாகுபடியாளர் விபரமும் குறிப்பிட்டு சான்று அளிக்கப்படும்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வங்கியாளர்கள் மற்றும் பொது சேவை மைய நிறுவனர்களுக்கு வழங்கிய அடங்கல் சான்றினை ஏற்றுக்கொண்டு காப்பீடு செய்து கொள்ள அனுமதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. காப்பீட்டு நிறுவனத்திற்கும் அடங்கல் குறித்த தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையம் ஆகியவற்றை முன்மொழிவு படிவம், சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை நகல், வங்கி கணக்கு புத்தகத்தின் தெளிவான நகல், ஆகிய ஆவணங்களுடன் அணுகி பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

எனவே நெல் சம்பா மற்றும் தாளடி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அனைவரும் இறுதி நேரம் வரை காத்திராமல் உடன் தங்கள் பயிர் செய்துள்ள வருவாய் கிராமத்தின், கிராம நிர்வாக அலுவலர்களை அணுகி அடங்கல் பெற்று காப்பீடு செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

விவசாயிகள் அடங்கல் பெறுவதில் ஏதேனும் சிரமம் ஏற்படின் உடன் தங்கள் பகுதி வட்டாட்சியர்களை அணுகிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்தகவலை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு. **ம.கோவிந்தராவ்,இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.